பக்கங்கள் 20

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 23 சனிக்கிழமை 11.11.2023 அதிர்வு 103

## வெளிநாட்டுப் பிரஜை தீ விபத்தில் மரணம்!

பத்தரமுல்ல – ஜயந்திபுர பகுதியில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று காலை இந்தத் தீப் பரவல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று 04▶



# கல்லறைகள் மேலிருந்து இராணுவமே வெளியேறு

### தேராவில் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாகப் போராட்டம்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கக் கோரி இராணுவ முகாம் அமைக்கப் பட்டுள்ள துயிலும் இல்லம் முன்பாக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"தேராவில் மாவீரர் துயிலும் 04▶

# எனக்கு நஞ்சூட்டி கொல்ல முயற்சி!

### அமைச்சர் ரொஷான் அதிர்ச்சித் தகவல்



"தற்போதைய சூழ்நிலையில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனக்கு நஞ்சூட்டப்படலாம். அந்த வழியில்கூட நான் கொலை செய்யப்படலாம்."

- இவ்வாறு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க.

கொழும்பில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கை கிரிக்கெட் நிறுவனம் எந்த அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்திடம் எமக்குத் தடையைக் கோரியது? அப்படித் தடையைக் கோரியவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? சட்டம், ஒழுங்கு இல்லையா? நான் இடைக்கால சபையை அமைக்க முன்னர் பலருடன் பேசினேன்.

தற்போது ஜனாதிபதி செயலகத்துக்கு நான் செல்வது கிடையாது. அங்கு எனக்கு நஞ்சூட்டப்படலாம் என்ற அச்சம் இருக்கின்றது. ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றாலும் அங்கு நீர் கூட அருந்தமாட்டேன். ஏனெனில் அதில் நஞ்சூட்டப்பட்டிருக்கலாம். அந்த வழியில்கூட நான் கொலை செய்யப்படலாம். 04▶

## மோ. சைக்கிள் மோதி வயோதிபப் பெண் பலி

புத்தளம் – சிலாபம் பிரதேசத்தில் அம்மன் கோயில் வீதியில் மோட்டார் சைக்கிள் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சிலாபம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருநாகல் பிரதேசத்தில் இருந்து சிலாபம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் நடந்து சென்ற பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் மற்றும் வீதியின் நடந்து சென்ற பெண் ஆகியோர் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் 04▶

## அடுத்த ஜனாதிபதியையும் மொட்டுவே தீர்மானிக்குமாம்

### அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் கூறுகின்றார்



"அழிவில் இருந்து மீண்டெழுந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வெற்றிகரமாகப் பயணித்துக்கொண்டிருக்கின்றது. எந்தக் கொம்பனாலும் கட்சியை அழிக்க முடியாது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் எமது கட்சியே தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும்." 04▶



# கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தி ஆறு பரல் கோடா குளத்தில் மீட்பு

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய குளம் பகுதியில் உள்ள பெரும் காடுகளுக்குள் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. இந்நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை தர்மபுரம் பகுதியில் 6 பரல் கோடாவை கிளிநொச்சி பொலிஸார் கண்டுபிடித்துக் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தர்மபுரம் பொலிஸாரால் பாரியளவு கசிப்பும் கோடாக்களும் கைப்பற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நேற்றைய தினமும் அதே பகுதியில் கசிப்பு உற்பத்திக்காக குளத்தின் நடுப்பகுதியில் தண்ணீருக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பரல் கோடாவை கிளிநொச்சி பொலிஸார் மற்றும் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாதர் சங்கம் மற்றும் கிராமத்து இளைஞர்கள் என பலர் இணைந்து கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யப்படுவது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹோட்டல் தடாகத்தில் விழுந்து இரண்டு வயதுக் குழந்தை சாவு!

காலி – பெந்தோட்டை பகுதியில் 2 வயதும் 2 மாதங்களான குழந்தை ஒன்று ஹோட்டலில் உள்ள நீச்சல் தடாகத்தில் விழுந்து உயிரிழந்துள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொழும்பு, திம்பிரிகஸ்யா பிரதேசத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் குழுவொன்று சுற்றுலாசென்று பெந்தோட்டை பிரதேசத்திலுள்ள ஹோட்டலில் தங்கியிருந்துள்ளது.

இதன்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தை அறையில் இல்லாததால் தாயும் தந்தையும் தேடிய போது, ஹோட்டலில் உள்ள நீச்சல் தடாகத்தில் குழந்தை இறந்து மிதந்த நிலையில் மீட்கப்பட்டு பெந்தோட்டை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 69 கிலோ கஞ்சா பொதிகள் அனலைதீவில் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம் – அனலைதீவில் ரூபா 2 கோடி 70 லட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை அனலைதீவு கரையோர பகுதியில் கைவிடப்பட்ட 18 பொதிகளில் இருந்து இந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

69 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சா இதன்போது கைப்பற்றப்பட்டது.



# ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவான நடவடிக்கை முன்னெடுப்பு!

## கல்வி இராஜாங்க அமைச்சர் தகவல்

நாட்டில் தற்போது நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சை அடுத்த வருடம் ஜூன் மாதத்தில் நடத்தப்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்த குமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் குமாரசிறி ரத்நாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே கல்வி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

நாட்டில் தேசிய பாடசாலைகள் 396, மாகாண பாடசாலைகள் 9, 915 உள்ளன. அந்த வகையில் மொத்தமான பாடசாலைகளின் எண்ணிக்கை 10,311 ஆகும்.

வடக்கில் செயலிழந்துள்ள பாடசாலைகள் 109. இவை மாகாண பாடசாலைகளுக்குள் உள்ளடங்குகின்றன.

தரப்படுத்தலுக்கு உட்பட்ட அதிபர்கள் உள்ள பாடசாலைகளில் தேசிய பாட



சாலைகள் 309. மாகாண பாடசாலைகள் 6,328 காணப்படுகின்றன. இந்த வகையில் மொத்தம் 6627 பாடசாலைகள் உள்ளன.

அத்துடன் பதில் அதிபர்கள் கடமை புரியும் பாடசாலைகளில் தேசிய பாடசாலைகள் 87. மாகாண பாடசாலைகள் 3478. மொத்தமாக 3,565 பாடசாலைகள் இந்த நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் பதில் அதிபர்கள் கடமையாற்றும் பாடசாலைகள் மேல் மாகாணத்தில் 235 காணப்படுகின்றன. மத்திய மாகாணத்தில் 564. சப்ரகமுவ மாகாணத்தில் 505. வடமேல் மாகாணத்தில் 414. ஊவா மாகாணத்தில் 364. வடமத்திய மாகாணத்தில் 355. தென்மாகனத்தில் 326. கிழக்கு மாகாணத்தில் 449. வட மாகாணத்தில் 269. அந்த வகையில் மொத்தமாக 3565 பாடசாலைகள் இவ்வாறு காணப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கு இணங்க இலங்கை அதிபர் சேவை தரம் 3ற்கான நியமனங்களின் பின்னர் அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

அது தொடர்பில் தற்போது தொழிற் சங்கங்களுடன் பேச்சு நடத்தப்பட்டு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

அதேபோன்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த மலையகப் பெருந்தோட்ட பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

அததுடன் இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் தரத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அதிபர் சேவை மூன்றாம் தரத்திற்கு ஆள்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# விரைவில் விளையாட்டுப் பல்கலைக்கழகம்; அதுவும் கூட சீன நிறுவனப் பங்களிப்புடன்!

இலங்கையில் 2024 காலாண்டுக்குள் விளையாட்டுத் தொடர்பான பல்கலைக்கழகத்தை அமைக்கும் பணிகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் வருமானத்தையும் நோக்கமாகக் கொண்டு இந்தப் பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்று விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இலங்கையில் விளையாட்டு தொடர்பான பல்கலைக்கழகமொன்றை அமைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பட்டப்படிப்புக்களை நிறைவு செய்யக் கூடிய வகையில் இந்த பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான தயார்ப்படுத்



தல்கள் இடம்பெற்று வருகின்றன.

2024 முதற்காலாண்டுக்குள் இதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

தனியார் துறையினரின் ஒருங்கிணைப்புடன் தனியார் பல்கலைக்கழகமாகவேனும் இதனை நடத்திச் செல்ல எதிர்பார்க்கின்றோம். இது தொடர்பில் சீன நிறுவனமொன்றுடனும் பேச்சுவ முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தென் ஆசியாவிலிருந்து ஒரு வருமான வழியாகக் கூட இது அமையக் கூடும்.

இந்தியா, மாலைத்தீவு, பாக்கிஸ்தான், நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலுள்ளவர்கள் இந்த பல்கலைக்கழகத்தை நாடினால் அதன் மூலம் எம்மால் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அரச, தனியார் கூட்டு முயற்சியில் இதனை அமைக்க எதிர்பார்த்துள்ளோம்.

விளையாட்டுத்துறை அமைச்சுக்கு 125 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப்பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு ஒரு பில்லியன் டொலரேனும் (முப்பதாயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகம்) தேவைப்படும். ஆசியா உட்பட ஏனைய நாடுகளையும் இலக்காகக் கொண்டு இதனை நிர்வகித்துச் செல்லும் பட்சத்தில் வருமானத்தில் சிக்கல் ஏற்படாது. - என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அடுத்த ஜனாதிபதியையும்...**

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை அழிப்பதற்குச் சிலர் முற்பட்டனர். கட்சியின் ஆதரவாளர்கள் பேரவாவிக்குள் தள்ளப்பட்டனர். அரசியல் பிரமுகர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். எனினும், சாம்பல் மேட்டில் இருந்து மீண்டெழுந்து பயணத்தை மேற்கொண்டுவருகின்றோம். எமது கருத்துக்களுக்கு சமூக வலைத்தளங்களில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கும் நபர்கள் உள்ளனர். யார் என்ன செய்தாலும் கட்சியை அழிக்க முடியாது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைத் தீர்மானிக்கும் பிரதான சக்தி எமது கட்சிதான், அதேபோல்தான் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களிலும் பிரதான தரப்பு எமது கட்சிதான்.” – என்றார்.

**எனக்கு நஞ்சூட்டி...**

நான் எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றம் செல்லவுள்ளேன். எனது இடைக்கால சபைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கினால் அர்ஜுன ரணதுங்கவைக் கொண்டு கிரிக்கெட்டை முன்னேற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு வேலையைச் செய்ய முடியாவிட்டால் இந்த அமைச்சும் எனக்குத் தேவையில்லை. ஜனாதிபதிக்கும் சரியான தகவல்களை வழங்காமல் சில அதிகாரிகள் அவரைத் தவறாக வழிநடத்துகின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் ஜனாதிபதி செயலகத்துக்குக் கூட செல்ல முடியாத நிலை இருக்கின்றது. பாதாள உலகக் குழுவைக் கொண்டு எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தலாம். எனது பாதுகாப்பை அதிகரிக்குமாறு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்தேன். ஆனால், இன்னும் அதற்குப் பதில் இல்லை.” – என்றார்.

**வெளிநாட்டுப் பிரஜை...**

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**மோட்டார் சைக்கிள்...**

சேர்க்கப்பட்ட நிலையில் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

75 வயதுடைய வயோதிபப் பெண்ணே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இன்று காலை இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**கல்லறைகள் மேலிருந்து...**

இல்லக் காணியில் பாரிய பிரதேசத்தை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். இந்நிலையில், மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு செய்வதற்கு இட வசதி இன்றிக் காணப்படுகின்றது. எமது உறவுகளைப் புதைத்த இடத்தில் அஞ்சலி செலுத்த முடியாத நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. மாவீரர் துயிலும் இல்லக் காணியில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறு நாம் பல தடவைகள் அழுத்தம் கொடுத்தும் இதுவரை பயன் கிட்டவில்லை. இதனால்தான் காணியில் உள்ள இராணுவத்தை வெளியேறுமாறு கோரி போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்.” – என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “பார்க்கவிடு பார்க்கவிடு கல்லறையில் அப்பாக்களைப் பார்க்கவிடு, கல்லறைகளை வழிபட வழிவிடு, கல்லறைகள் மேலிருந்து இராணுவமே வெளியேறு, மிதிக்காதே மிதிக்காதே புனிதர்களை மிதிக்காதே, அழவிடு அழவிடு அம்மாக்களை அழவிடு, விளக்கேற்றுவோம் விளக்கேற்றுவோம் பிள்ளைகளுக்கு விளக்கேற்றுவோம், கல்லறைகளை அழிப்பதும் புத்தனின் போதனையா?” போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாதைகளைத் தாங்கியும் நின்றனர்.

இந்தப் போராட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், முன்னாள் கரைச்சி மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

















# சிம் கார்ட்டுகள் ஒழுங்குபடுத்தல் குறித்து மொபைல் பாவனையாளருக்கு அறிவித்தல்

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் கூற்றுப்படி, கையடக்க தொலைபேசி சிம்களை புதுப்பிக்கும் நடவடிக்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் கையடக்க தொலைபேசி சிம் மீள் பதிவு சேவையை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் தாங்கள் பயன்படுத்தும் சிம் கார்டைத் தமது பெயரில் பதிவு செய்து கொள்வது கட்டாயம் என தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உங்கள் கையடக்க தொலைபேசி இருந்து #132# ஐ டயல் செய்வதன் மூலம், உங்கள் அடையாள அட்டை



எண்ணின் கீழ் உள்ள கையடக்க தொலைபேசி எண்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உங்களின் அடையாள அட்டையில் மற்றசிம்கள்பதிவுசெய்யப்பட்டிருந்தால், உடனடியாக அந்த சிம்களை ரத்து செய்ய வேண்டும் என்று தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு கூறுகிறது.

அவ்வாறு செய்யாமல், சிம் மூலம் முறைகேடுகளை யாராவது செய்தால், அதற்கு அடையாள அட்டை உரிமையாளர்களே பொறுப்பேற்க வேண்டும் என்று ஆணையம் கூறுகிறது.

மேலும் நபர் ஒருவர் பயன்படுத்தும் சிம் கார்ட் தனது பெயரில் பதிவு செய்யப்படாத பட்சத்தில், அவர் பயன்படுத்தும் சிம் கார்ட் வைத்திருக்கும் தொலைபேசி நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு அந்த சிம்கார்டை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# திருத்தந்தை பிரான்ஸிஸை சந்தித்த இலங்கை ஆயர்கள்

(மன்னார் நிருபர்)

இலங்கை ஆயர் பேரவையினர் அண்மையில் ரோமில் திருத்தந்தை பிரான்ஸிசைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

உலகில் உள்ள ஆயர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ரோம் சென்று திருத்தந்தையைச் சந்திப்பது வழக்கமாகமாகும். இதன் அடிப்படையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இம்முக்கியத்துவம் வாய்ந்த திருப் பயணத்தில் இலங்கையின் வடக்கு – கிழக்கு ஆயர்களும் இணைந்து கொண்டுள்ளனர்.

இதன் போது இலங்கை கிறிஸ்தவ திருச்சபையின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால விவகாரங்கள் குறித்து பாப்பரசருக்கு தெரிவிக்கப்பட்டதுடன், பரிசுத்த பாப்பரசரின் ஆலோசனைகளையும் இலங்கை ஆயர்கள் பெற்றனர்.

இந்த திருப்பயணமானது 'Ad Limina Visit' என திருச்சபையால் அழைக்கப்படுகிறது.

இந்த திருப்பயணமானது 'Ad Limina Visit' என திருச்சபையால் அழைக்கப்படுகிறது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கிரிக்கெட் மாபியா

இலங்கைக் கிரிக்கெட் பெரும் மாபியாக் கும்பலிடம் சிக்கிக் கொண்டு உள்ளது என்று வெளிப்படுத்தி நாடாளுமன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கையோடு, அதை ருசுப்படுத்தும் - ஆதாரப்படுத்தும் - ஒரு நிகழ்வு நடந்தேறியிருக்கின்றது.

இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் அரசியல் புகுந்துள்ளது என்று தெரிவித்து, சர்வதேசக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கைக் கிரிக்கெட்டை ஐ.சி.சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தி நேற்று விடுத்த அவசர அறிவிப்பு, இந்த மாபியாக்களின் அட்டூழியச் செல்வாக்கு எங்கு வரை சென்று இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரமாகியுள்ளது.

முன்னதாக, இலங்கைக் கிரிக்கெட் நிறுவன நிர்வாகத்தை இடைநிறுத்தி, புதிய இடைக்கால நிர்வாக சபையை நியமித்த விளையாட்டுத் துறை அமைச்சரின் நடவடிக்கையை வேண்டுமானால் அரசியல் நடவடிக்கையாக அர்த்தப்படுத்த முடியும். ஆனால், அந்த உத்தரவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளபடியால் விளையாட்டுத் துறை அமைச்சரின் நடவடிக்கை செயற்படாமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. எனவே அதனை இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் அரசியல் புகுந்த விடயம் என்று காட்டி ஐ.சி.சி. இந்த உறுப்புரிமைத் தடையை இவ்வளவு அவசரமாகக் கொண்டு வந்திருக்க முடியாது.

அதே நேரம், இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் தொடர்பாக முழு நாட்டு மக்களின் கருத்தியலையும் பிரதிபலிக்கும் விதத்தில் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தை சட்டப்படி கட்டுப்படுத்தும் நடவடிக்கை அல்ல. அதனை நாடாளுமன்ற துணை சபாநாயகரே வெளிப்படையாகத் தெரியப்படுத்தியுள்ளார். தெளிவுபடுத்தியுள்ளார். ஆகவே அந்தத் தீர்மானத்தையும் இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் அரசியல் புகுந்த விடயமாக அர்த்தப்படுத்த முடியாது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் இலங்கை அணி படுதோல்வி அடைந்த பின்னணியில் நாட்டு மக்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் இவ்விடயம் தொடர்பில் தங்களின் அதிருப்தியைப் பகிரங்கமாக - சுயாதீனமாக - வெளியிட உரிமை உள்ளது. அதனை இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகத்துக்குள் அரசியல் புகுந்து விட்டது என்று ஐ.சி.சி. அர்த்தப்படுத்துமானால் அதைப் போல மூடத்தனமான கருத்து வேறு ஏதும் இருக்க முடியாது.

"எங்களைக் கட்டுப்படுத்த முயற்சித்தால் ஐ.சி.சி. மூலம் இலங்கைக் கிரிக்கெட்டையே முடக்குவோம்" - என்று இப்போதைய கிரிக்கெட் நிறுவனத் தலைமை இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சரையும் பிற தரப்புகளையும் எச்சரித்ததாக முன்னரே செய்திகள் வெளியாக இருந்தன. அப்படி எச்சரிப்பதே ஒரு மாபியா நடவடிக்கைதான்.

எச்சரித்தபடிதான் விடயங்கள் நடந்துள்ளன.

அதை பிரபல கிரிக்கெட் செய்தி ஊடகமான உசஉைகெழ இணையத்தளம் அம்பலப்படுத்தியும் இருக்கின்றது. 'ஸ்ரீலங்கா கிரிக்கெட்'டின் உறுப்புரிமையை உடனடியாக நிறுத்த ஐ.சி.சியிடம் ஷம்மி சில்வா தலைமையிலான இலங்கைக் கிரிக்கெட் அமைப்பே கோரிக்கை விடுத்ததாக அந்த இணையத்தளம் உள்வீட்டுச் செய்தியை அம்பலப்படுத்தி உள்ளது.

தங்களுடைய அதிகாரத்தைத் தக்க வைக்க நாட்டின் கிரிக்கெட்டையே தடை செய்யும் இந்தச் சூதாட்டத் தலைவர்களின் நிர்வாகத்தில் இலங்கையின் கிரிக்கெட் தொடர்வது நாட்டுக்குப் பேராபத்து. பெரும் அபகீர்த்தி. பேரிழுக்கு.

இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய - வலிமையான - அரசியல் பிரமுகர் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா. அவரின் மகனும் பிரபல வர்த்தகருமான ஜே அமித்பாய் ஷா இப்போது இந்திய கிரிக்கெட் கவுன்ஸிலின் செயலாளர். அத்துடன் ஆசிய கிரிக்கெட் கவுன்ஸிலின் தலைவரும் கூட. அவரின் ஆதரவுடன்தான் இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகிகள் இந்தக் குளறுபடிகளை முன்னெடுக்கின்றனர் என்ற குற்றச்சாட்டுப் பரவலாக முன் வைக்கப்பட்டு வருவதும் கவனிக்கத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருளுடன் சப் இன்ஸ்பெக்டர் கைது!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை – நிலாவெளி பொலிஸ் நிலையக் குற்றவியல் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஐஸ் போதைப் பொருளுடன் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் பொறுப்பதிகாரி நிலாவெளி பொலிஸ் நிலையத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் திருகோணமலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது திருகோணமலை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அலஸ்தோட்டம் பகுதியில் வைத்து அவரை வழி மறித்துச்சோ தனையிட்டபோத. அவர் கைது செய்யப்பட்டார் எனவும் அவரிடமிருந்து 25 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பொலிஸ் அதிகாரியை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் நிலாவெளி குற்றவியல் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்த என்.எல்.டி.ஞானக வதுரங்க கருணாரத்ன (வயது 33) எனவும் தெரிய வருகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பொலிஸ் அதிகாரியை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தத் தாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்வம் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2023

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்."

தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)







# பஸ்ஸூம் கூலர் வாகனமும் இன்று கொடிகாமத்தில் மோதி விபத்து

யாழ்ப்பாணம், கொடிகாமம் பகுதியில் தனியார் பஸ்ஸூம் கூலர் வாகனமொன்றும் மோதி விபத்துக்குள்ளாகின.

இன்று காலை இந்த விபத்து கொடிகாமம் – புத்தூர் சந்தி இடையே இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த பஸ்ஸூம் யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த கூலர் வாகனமும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

கூலர் வாகன சாரதி படு காயமடைந்துள்ள நிலையில் ஏனையவர்கள் சிறிய காயங்களுடன் உயிர் தப்பினர்.







# சிவானந்தா தேசியப் பாடசாலையில் நேற்று இலவச கண் வைத்தியமுகாம்





(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை மற்றும் மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரியில் 1988 ஆம் ஆண்டு கல்வி கற்று கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களினால் உருவாக்கப்பட்ட சிவானந்தா மற்றும் விவேகானந்தா மாணவ ஒன்றியம் கல்லடிப் பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி மற்றும் அதனுடன் சார்ந்த பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கையிலும் பங்களிப்பு செய்து வருகின்றது .

அந்த வகையில் 2015 ஆம் ஆண்டு முதல் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்குகளும், கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் சிறிகரநாதன் தலைமையிலான வைத்திய குழுவினரினால் தரம் இரண்டு மாணவர்களுக்கான இலவச கண் பரிசோதனை சிகிச்சை முகாமையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் சிவானந்தா மற்றும் விவேகானந்தா மாணவ ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் சிறிகரநாதன் தலைமையில் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு இலவச கண் பரிசோதனையை மேற்கொண்டிருந்தனர்.



# மூதூர் கலாசார மண்டபத் திறப்பு விழா

(எம்.எம்.றம்ஸீன்)

உலக வங்கியின் நிதிப் பங்களிப்புடனான LDSP திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூதூர் கலாசார மண்டபத்தின் புனர்நிர்மான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் அது நிறந்து வைக்கப்பட்டது.

பிரதேச சபை செயலாளர் வி.சத்தியசோதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் மண்டபத்தை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக உள்ளூராட்சி திணைக்களத்தின் பிரதிநிதிகளும் மற்றும் முதூர் பிர



தேசத்த அரச நிறுவனங்களின் தலைவர்களும் பங்கேற்றனர்.

மிக நீண்டகாலமாக மக்கள் பயன்பாடற்று இருந்த மூதூர் கலாசார மண்டபம் மக்கள் பயன்படுத்தும் விதமாகவும், பிரதேச சபைக்கு வருமானமீட்டும் தளமாகவும் தொழிற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை டிசம்பர் 23, 24 இல்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை பரீட்சைத் திணைக்ளத்தினால் நடத்தப்படும் 2023 ஆம் ஆண்டிற்கான அஹதிய்யாப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ளதென முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இசட். ஏ.எம். பைசல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை சம்பந்தமான பிரமாணக் குறிப்புகள் மற்றும் அறிவுறுத்தல்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வர்த்தமானியில் வெளியிடப்படும்.




மேலும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இணையத்தளம் (www.muslimaffairs.gov.lk) ஊடாகவும் இவ்விடயம் அறிவிக்கப்படவுள்ளது.

இணையவழி மூலமாக மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 09.00 மணி முதல் 27 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 09.00 மணி வரை மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

அது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு, 'பணிப்பாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 180, ரீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.' என்ற

முகவரியூடாகவோ அல்லது 011-2667909 / 011-2669994 என்ற தொலைபேசியூடாகத் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மூதூரில் காணி அனுமதிப்பத்திரங்களுக்கான கடிதங்கள் ஆளுநரினால் நேற்றுக் கையளிப்பு

காணிக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு மூதூரில் இடம் பெற்றது. மூதூர் பிரதேச செயலகத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று உத்தியோபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

மூதூர் பிரதேச செயலாளர் எம். பீ.எம். முபாறக் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், செக் குடியரசின் இலங்கைக்கான உயர்ஸ் தானிகர், மேலதிக மாவட்டச் செயலாளர், கிழக்கு மாகாணக் காணி ஆணையாளர், கிழக்கு மாகாண முதலமைச்சரின் திட்டமிடல் பணிப்பாளர், கிழக்கு மாகாண உதவி காணி ஆணையாளர், மூதூர் பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், கிராம நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் காணிக் கச்சேரி ஊடாக 200 காணி உரிமையாளர்க ளுக்கு அனுமதிப்பத்திரங்களுக்கான கடிதம் கையளிக்கப்பட்டது.






# சாய்ந்தமருதில் மாணவருக்கு இலவச பாதணிகள் வழங்கல்

**(எம்.ஏ.ஏ.அக்தார்)**

சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியா லயத்தில் இரண்டாம் கட்டமாக தேவையு டைய சுமார் 50 மாணவர்களுக்கு பாட சாலைப் பாதணிகளை இலவசமாக வழங்கி வைக்கும் நிகழ்வு பாடசாலை பாடசாலை அதிபர் எம்.எம்.சம்சுதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர், முகாமைத்துவக் குழுவில் அங் கம் வகிக்கும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இப்பாதணிகளை பெயர் குறிப்பிட விரும்பாத – சாய்ந்தமருதைச் சேர்ந்த – கத்தாரில் வசிக்கும் சகோதரர் ஒருவர் அன்பளிப்பு செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது.







# மரப் பூச்சுக் கைவினைக் கலைஞர்களுக்கு வடக்கில் திறன் விருத்திப் பயிற்சிப் பாசறை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாடு முழுவதிலும் உள்ள அனுபவமிக்க மரப் பூச்சுக் கைவினை கலைஞர்களுக்கான அறிவு மற்றும் திறன்களை அதிகரிப்பதற்காக நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் 'பின்தாரு அபிமான்' நிகழ்ச்சித் திட்டங்கள் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது.

இந்த பயிற்சி பாசறை இம்முறை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இப்பாசறையில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 130 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சி திட்டம் ஒரு பயிற்சி பட்டறை வடிவத்தில் கட்டமைக்கப்பட்டதால் உற்பத்திகள் மற்றும் அதன் பயன்பாடுகள் பற்றிய தெளிவான அறிவைப் பெறவும், அத்துடன் நடைமுறைச் செயலமர்வில் பங்குபற்றுவோர் தமது திறமைகள அதிகரிக்கவும் இது மிகவும் சிறந்ததொரு தளமாக அமைகின்றது.

அடுத்த பயிற்சி பட்டறை அனுராதபுரத்தில் நடைபெவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.





# மட்டு. மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மாவட்டம் முழுவதும் உள்ள அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கான சிரமதானப் பணிகளை முன்னெடுக்குமாறு மாவட்ட செயலகத்தினால் பணிக்கப்பட்டுள்ள நிலையில், மாவட்ட செயலகம் அமைந்துள்ள கோட்டை வளாகத்தைச் சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்யும் நடவடிக்கையை மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னெடுத்தனர்.



மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.மதிவண்ணனின் தலைமையில் சிரமதானத்திற்காக திட்டமிட்டபடி ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் அந்தப் பணி இடம் பெற்று வருகின்றது.

தற்போது பருவ மழைக் காலம் ஆரம்பித்துள்ளமையால் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனடிப்படையில் கோட்டை வளாகத்தின் சுற்றுப்புறங்கள், நீர்த்தடாகம், வாவிக்கரைப் பகுதி உட்பட்ட இடங்களில் காணப்படும் நீர்தேங்கும் கொள்கலன்கள் அகற்றும் சிரமதானப் பணிகள் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களினால் கிளைகள் ரீதியாக பணிக்கப்பட்ட இடங்களில் முன்னெடுக்கப்பட்டன.





# மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி வங்கிகளை விரைந்து கணனிமயமாக்கும் செயற்திட்டம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி வங்கிகளைக் கணனி மயமாக்கல் ஊடாக கணக்கு நடவடிக்கையை நடத்திச் செல்லுதல் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் செயல்பாட்டை துரிதப்படுத்துவதற்கான ஒரு நாள் செயலமர்வு மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

சமுர்த்தி வங்கிகளைக் கணனி மயமாக்கும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கான இச்செயலமர்வு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுர்த்தி வங்கிகளின் கணனிப் பிரிவுக்கான தொழில் நுட்ப உத்தியோகத்தர் த.பவளேந்திரனினால் முன்னெடுக்கப்பட்டது.

இச்செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் 31 சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள், வங்கி சங்க முகாமையாளர்கள், கணக்காய்வு உத்தியோகத்தர்கள், கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் யூ தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும் பங்குபற்றி இருந்தனர்.

இதன் போது சமுர்த்தி உத்தியோகத்தர்களினால் கணனிமயமாக்கும் போது எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி வங்கி பிரிவுக்கான முகாமையாளர் திருமதி நிர்மலாதேவி கிரிதராஜ் மற்றும் மாவட்ட செயலக சிரேட்ஹ்ட சமுர்த்தி முகாமையாளர் ஜே.எவ்.மனோகிதராஜ் ஆகியோரும் கலந்து கொண்டானர்.









# தீபாவளி தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் சாகச நிகழ்வு

(த.சுபேசன்)

தென்மராட்சி மட்டுவில் கிராமத்தைச் சேர்ந்த அறுபது வயதான உலக சாதனையாளர் செ. திருச்செல்வம் தீபாவளி தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4மணிக்கு மட்டுவிலில் சாகச நிகழ்வொன்றை நிகழ்த்தவுள்ளார்.

மட்டுவில் கண்ணகை சிறுவர் கழக முன்றலில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரம் இரண்டாயிரம் கிலோ எடை கொண்ட வாகனத்தை தனது தலை முடியால் இழுத்து சாகசம் நிகழ்த்தவிருக்கின்றார் என அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

இவர் அண்மையில் தனது முகத் தாடியினால் 400 மீற்றர் தூரம் 1500கிலோ எடை கொண்ட வாகனத்தை இழுத்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொதி வழங்கல்

## பொத்துவிலில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு

**(எம்.ஏ.றமீஸ்)**

பொத்துவில் பிரதேச செயலகத்தின் கீழ்தெரிவுசெய்யப்பட்டபயனாளிகளுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு பொத்துவில் ஹிஜ்ரா நகரில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு மாதங்களுக்குத் தேவையான 15 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப் பட்டன.

இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஊட்டச் சத்து குறைபாடுள்ள குடும்பங்கள், மாற்று வலுவுள்ளோரைக் கொண்ட குடும்பங்கள், நாட்பட்ட நோயாளர்களைக் கொண்ட குடும்பங்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் முதியோர் போன்றோர் தெரிவு செய்யப் பட்டனர்.

இவ்வுதவி பெறுவதற்கென பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் 5,304 பயனாளிகள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.. அவர்களுள் முதற்கட்டமாக 178 பயனாளிகளுக்கு இவ்வுணவுப்பொதிகள் வழங்கி வைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், உதவி பிரதேச செயலாளர் எம்.இராமக் குட்டி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.எம்.எம்.சப்ரி, உலக உணவு திட்டத் தின் இணைப்பாளர் எஸ்.பாக்கியநாதன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.












सत्यमेव जयते
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
நல்லதோர் குடும்பம்
சிறப்புரை
திரு. மோகனசுந்தரம்
நகைச்சுவை பேச்சாளர்
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 18 நவம்பர் 2023 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 05.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
+94 703 563213
+94 21 222 8358
www.jride.lk
நாங்கள் தயார் நீங்கள் தயாரா?
WE ARE READY ARE YOU READY?
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள். இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**

AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING

KDH BEST FOR VAN RENT
Make Your Ride Better



CALL NOW +94 773 776 882



# பிறந்தநாள் நிகழ்வில் மது அருந்தியவர் சாவு

கொழும்பு – கோட்டையில் உள்ள நான்கு மாடிக் கட்டடத்தில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் மது அருந்திக்கொண்டிருந்த 38 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளமையுடன், இரண்டு பெண்கள் உட்பட மூவர் திடீரென சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

ரன்ன வாடிகல பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இதில் உயிரிழந்துள்ளார்.

பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு வந்தவர்கள் குறித்த சரியான தகவல்கள் இல்லை என்றும், அவர்கள் அதிகவிலை கொடுத்து ஏழு போத்தல் மதுவை வாங்கி அருந்தியமை தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த இடத்திற்கு கொழும்பு மருத்துவ பீடத்தின் பேராசிரியர் அசேல மெண்டிஸ் வந்து தடயவியல் பரிசோதனை நடத்தினார்.

# யாழ்.கொலைச் சந்தேகநபர் தமிழகத்தில் வைத்துக் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் வழக்கு நிலுவையில் உள்ள சந்தேக நபர் ஒருவர் தமிழ்நாட்டிற்குத் தப்பிச் சென்ற நிலையில் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏழு ஆண்டுகளிற்கு முன்பு இடம்பெற்ற கொலைக் குற்றச்சாட்டில் சந்தேக நபராக உள்ளவரே தப்பித்து சென்றபோது இப்போது சிக்கியுள்ளார்.

வறுமையின் காரணமாகத் தாம் இலங்கையிலிருந்து தப்பித்து வந்ததார் என இவர் பொய் உரைத்தார் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் மீது இந்தியாவின் இராமநாதபுரம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசேட சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.



# பெண்ணொருவர் படுகொலை; கட்டிலுக்கு அடியில் சடலம்!

வீடொன்றில் இருந்து பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டு கட்டிலுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

கம்பளை தெல்பிடிய தேவிட பகுதியைச் சேர்ந்த பத்மா தர்மசேன என்ற 63 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலையுண்ட பெண் பண கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நகருக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அடையாளம் தெரியாத நபரொருவர் அவரைக் கொலை செய்து அவரிடம் இருந்த பணத்தை பறித்துச் சென்றிருக்கக்கூடும் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



# கீரிமலை ஜனாதிபதி மாளிகையின் ஒப்பந்தம் குறித்து முரண்பாடுகள்!

## சட்ட நடவடிக்கைகளுக்கு தயாராகும் காணி உரிமையாளர்கள்

■ நடராசா லோகதயாளன் -

யாழ்ப்பாணம் கீரிமலையில் பொது மக்களுக்குச் சொந்தமான 29 ஏக்கர் காணிகள் தேசிய பாதுகாப்பு என்னும் பெயரில் அபகரிக்கப்பட்டு, பின்னர் ராஜபக்ஸவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் வடக்கிற்கு அவர் விஜயம் செய்கின்றபோது ஓய்வாக தங்குவதை நோக்காகக் கொண்டு அங்கு 'வடக்கு ஜனாதிபதி மாளிகை' நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பகுதி அளவில் நிறைவுக்கு வந்துள்ள இந்த ஜனாதிபதி மாளிகை தற்போது தனியார் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காகவும், தொழில்நுட்ப பூங்கா ஒன்றை அமைப்பதற்காகவும் ஐம்பது ஆண்டுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

### சத்தம் சந்தடியின்றி குத்தகைக்கு வழங்கல்

இந்த நிர்மாணத் தொகுதியானது, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவந்த நிலையில் திடீரென தனியாருக்குச் சத்தம் சந்தடியின்றிக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளமை ஆச்சரியமளிப்பதாக இருக்கின்றது.

இந்தக் காணிகளின் சொந்தகாரர்கள் தமது நிலங்களை மீளக்கையளிக்குமாறு வலியுறுத்தல்களை செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அப்பகுதியில் வரலாற்றுத் தொன்மங்களும், ஆலயங்களும் காணப்படுகின்றன என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத் தலைவர் ஆறு.திருமுருகன் தெரிவிக்கின்றார்.

அதுமட்டுமன்றி, தனியாருக்குச் சொந்தமான காணிகளில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான நிர்மாணத்தை அந்த உரிமையாளர்களுக்குத் தெரியாது அரசாங்கம் தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளது.

### ஒருங்கிணைப்புக் குழுவில் வெளியான தகவல்கள்

அதேநேரம், அந்த நிறுவனத்துக்கு வழங்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளும், அதற்கான ஒப்பந்தங்களும் கொடுக்கல் வாங்கல்களும் குழப்பகரமாக இருப்பது, ஒக்டோபர் 26 இல் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்தின் போது வெளிப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில், கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்குமாறு கோரப்பட்டபோது நீண்ட விவாதம் இடம்பெற்றது.

இந்த விவாதத்தின்போது, தனியாரிடமிருந்து சட்ட ரீதியாகச் சுவீகரிக்காத காணி எவ்வாறு பிற நிறுவனத்துக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டது, நாம் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்லர், நில உரிமையாளர்களிற்கான இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தெல்லிப்பளை பிரதேச செயலாளர், முதல்கட்டமாக இந்த அனுமதி கோரப்பட்டாலும் நில உரிமையாளர்களிற்கும் அந்த இழப்பீடு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பதிலளித்தார்.

### சிவஞானம் கருத்து

"அந்தக் கட்டடத்தை மாகாண சபைக்குத் தருமாறு கோரினோம். அல்லது அதனை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திடம் கொடுங்கள். யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் வேண்டாம் என்றோ அல்லது மறுதலித்தாலோ தனியார் தொடர்பில் பரிசீலிக்கலாம். மாறாக நில உரிமையாளரின் ஒப்புதல் இன்றி பிடுங்கிய நிலத்தை எவ்வாறு இன்னுமொருவருக்கு வழங்குவது?" – என வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கேள்வி எழுப்பினார்.

### ஏமாற்று வேலை

"அங்கே உள்ள நிலத்தின் உரிமையாளர்கள் பலர் நிலத்தைக் கோருகின்றனர். அத்தோடு அங்கே இருந்த மத அடையாளங்களை பாதுகாத்து தாருங்களென ஆறு.திருமுருகன் ஐயா கோருகின்றார்.

நீங்களோ அந்த நிலத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்க ஒப்புதல் தாருங்கள் என கோருகின்றீர்கள். இருந்தபோதும் கடந்த வாரமே தனியார் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பந்தம் எழுதி வழங்கி விட்டதாக படங்களுடன் செய்தி வந்துள்ளது. இது ஒரு ஏமாற்றுவேலை" – என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

எனினும், நகர அபவிருத்தி அதிகார சபையின் மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் சமன் திசநாயக்க, அவ்வாறு எந்தத் தனியார் பல்கலைக்கழகத்திற்கும் இதுவரை வழங்கப்படவில்லையென உறுதிபடத்தெரிவித்தார்.

அதேநேரம், தற்போது நகர அபவிருத்தி அதிகார சபையினருக்கு வழங்குவதற்கான அனுமதிதானே, அதனை வழங்குவோம் என இணைத் தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான பி.எம்.எஸ்.சாள்ஸ் கோரினார்.

### சுமந்திரனின் வாதம்

இதனை மறுத்து கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இந்த நிலம் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் நில உரிமையாளரின் ஒப்புதல் இன்றி 38ஏஇன் கீழ் எடுக்கப்பட்டதல்லவா?எனக் கோரியபோது தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவசிறி 'ஆம்' எனப் பதிலளித்தார்.


தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் –

"38ஏஇன் கீழ் பாதுகாப்புத் தரப்பினருக்கு மட்டுமே நிலத்தை சுவீகரிக்க முடியும். அவ்வாறு இருக்க அத்தச் சட்டத்தை பயன்படுத்தி நகர அபிவருத்தி அதிகார சபைக்கு நிலத்தை வழங்கும் கோரிக்கைக்கு எப்படி அனுமதி வழங்க முடியும்? இதன் ஆரம்பமும் நடவடிக்கையும் பிழையாக இருப்பதனால் இந்த அனுமதி வழங்க முடியாது." – எனத் திடமாகத் தெரிவித்தார்.

இச்சமயத்தில், அனுமதி மறுக்கப்படுவதனால் நீங்கள் தலைமை அலுவல

(17ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை ஜனாதிபதி மாளிகையின்...




**(16ஆம் பக்கத் தொடர்ச்சி)**

கத்துடன் உரையாடுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பிரதிப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டு கூட்டம் நிறைவுக்கு வந்தது.

### கோட்டாவின் அறிவித்தல்

இவ்வாறிருக்கையில், கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் ஜே/226 இலக்க கிராம சேவகர் பிரிவில் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலத்தின்போது அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள 29 ஏக்கர் நிலத்தை 2020ஆம் ஆண்டு நவம்பரில் பதவிக்கு வந்த அவரது சகோதரர் கோட்டபாய ராஜபக்ஷ நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதாக 2021-09-09 அன்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கிய 29 ஏக்கரில் மாளிகை அமைந்துள்ள பிரதேசங்கள் உள்ளடங்களாக 12 ஏக்கரை காணியும் அதில் காணப்படுகின்ற நிர்மாணங்களும் நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவினால், கனடிய தமிழரைத் தலைமையாகக் கொண்ட நொதேன் யுனி எனும் தனியார் பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றை முன்னெடுப்பதற்காக அடுத்த ஐம்பது வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனை நொதேன் யுனி என்ற தனியார் நிறுவனம் உத்தியோக பூர்வமாக அது வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை மூலமாக உறுதி செய்துள்ளது. அது மட்டுமன்றி அந்த நிறுவனம் குத்தகைக்கான ஒப்பந்த நிகழ்வின் படங்களையும் உத்தியோக பூர்வமாகத் தனது சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளது.

### இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் சம்பந்தம்

அதேநேரம், இந்த குத்தகைக்கான ஒப்பந்தத்தின் பிரகாரம், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான 29 ஏக்கர் காணிகளில் இருந்து 12 ஏக்கர் நிலம் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் ஊடாகவே தனியார் நிறுவனமான நொதேன் யுனிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி பத்தரமுல்லயில் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது. அதில் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் எல். ரத்நாயக்காவும் கலந்து கொண்டிருந்தார்.

### ஐம்பதாயிரம் கோடி ரூபா முதலீடு

இந்நிலையில், குறித்த பகுதியில் அடுத்த ஐம்பது வருடங்களுக்கு அண்ணளவாக ஐம்பதாயிரம் கோடி ரூபா முதலீடு மேற்கொள்ளவும், ஆண்டுக்கு 1500 தொழில்நுட்ப நிபுணத்துவம் சார்ந்த இளைஞர், யுவதிகளை நாட்டுக்கு வழங்கவும், 3000 வரையிலானவர்களுக்கு தொழில்நுட்ப பூங்காவில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கவும் தனியார் நிறுவனமான நொதேன் யுனி திட்டமிட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க 7 சைவ ஆலயங்களின் அடையாளங்களை அழிக்கப்பட்டே அன்று 29 ஏக்கரில் ஆடம்பரமான ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டது. அத்துடன் தொல்பொருள் அடையாளங்களும் தடம் தெரியாது மாற்றப்பட்டுள்ளன.

### ஆறு.திருமுருகன் தகவல்

இந்நிலையில், அந்தப் பகுதிக்கு நேரில் சென்று பார்த்துத் திரும்பியுள்ள அகில இலங்கை இந்துமா மன்றத்தின் துணைத் தலைவர் ஆறு.திருமுருகன், கீரிமலையில் மிகப் பழமை வாய்ந்த சிவன் ஆலயம், சடையம்மா மடம், கதிர்காமத்திற்கு யாத்திரை ஆரம்பிக்கும் முருகன் ஆலயம் என்பன அமைந்திருந்த இடங்கள் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டே மஹிந்த ஆடம்பர மாளிகை அமைத்தார் என்றும், வலி. வடக்கு கீரிமலை பகுதியில் இருந்த சிவன் ஆலயம் அருகே கிருஷ்ணன் ஆலயம் ஒன்றும் இருந்தது என்றும் பட்டியலிடுகின்றார்.

அதேநேரம், இந்த நிலத்தின் நிர்வாகப் பொறுப்பைத் தன்னகத்தே வைத்திருந்த நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் இவ்விடயம் சம்பந்தமாக கேட்டபோது, ஜனாதிபதி மாளிகையைத் தனியாருக்கு குத்தகைக்கு வழங்கியதாக ஊடகங்களில் வெளிவந்த செய்தி தவறானது, அவ்வாறு வழங்குவதற்கான முன் ஆயத்தங்களே இடம் பெறுகின்றன, குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி மனுக்கோரல் கூட இடம்பெறவில்லை என்று பதிலளிக்கப்பட்டது.

### குழப்பமான நிலை

மேலும், அப்பகுதியில், 29 ஏக்கர் நிலத்தில் தனியாக 12 ஏக்கரைப் பிரிப்பதற்கான அளவீடுகளும் விரைவில் இடம்பெறவுள்ளன. அதற்கான நடவடிக்கைகளை தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை முன்னெடுத்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறன நிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு விட்டதாக அறிவித்துள்ள நொதேன் யுனி தனியார் பல்கலைக் கழகத்தின் இத்திட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர் கன்டி, நாம் எழுத்து மூலமான ஒப்பந்தத்தை மேற்கொண்டு அதன் மொத்தப் பெறுமதியில் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தையும் செலுத்தி முடித்து விட்டோம். அங்கே முன்னெடுக்கவுள்ள திட்ட வரைவை விரைவில் சமர்ப்பித்து ஒரு மாத காலத்திற்குள் எமது பணியை ஆரம்பிக்கவுள்ளோம் என்று பதிலளித்தார்.

ஆகவே, அரசாங்கம், குத்தகைக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறினாலும், தனியார் நிறுவனம் ஒப்பந்தம் நிறைவடைந்து விட்டதாக தெரிவிப்பதால் குழப்பமான நிலைமைகள் நீடித்துக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் நெதேன் யுனி தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள 12ஏக்கர்கள் உள்ளடங்கலாக அப்பகுதியில் உள்ள 29ஏக்கர் காணிகளின் உரிமையாளர்கள் தற்போது நீதிமன்றத்தை நாடுவதற்கான முன்னெடுப்புக்களைச் செய்து வருகின்றனர்.

### இரட்ணஜீவன் /ஹூல் கருத்து

இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள காணி உரிமையாளர்களில் ஒருவர் தனது காணியின் தத்துவ உரித்தை யாழில் வசிக்கும் தனது மைத்துனரான இரட்ணஜீவன் /ஹூலுக்கு வழங்கியுள்ள நிலையில் அவர் தெரிவிக்கையில், "நிலம் தொடர்பில் எமது கருத்தை கேட்டறியாது, எம்மை அழைத்து காண்பிக்காது, இராணுவ வலயமாக வைத்துக்கொண்டு, அரசு தான் நினைத்தவர்களிற்கு நினைத்த மாத்திரத்தில் வழங்குவதனை ஏற்கமுடியாது. நாம் கல்விக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் தனியார் முதலீட்டாளர் தனக்கு வழங்கியதாகக் கூறுகின்றார். நகர அபிவிருத்தி அதிகார சபை இல்லை என்கின்றது. அதனால் அங்கே என்ன இடம்பெறுகின்றது என்பதனை அவதானிக்கின்றோம்.அதன் பிரகாரம் நீதிமன்றை நாட எண்ணியுள்ளோம்" - என்றார்.





# வவுனியா செட்டிக்குளத்தில் சிறப்பாக நடந்த பிரதேச பண்பாட்டு பெருவிழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலகமும் கலாசார பேர வையும் இணைந்து நடத்திய 'பிரதேச பண்பாட்டு பெருவிழா- 2023' அமரர் ஞானவாசகர் (அழகக்கோன்) அரங்கில் நேற்று முன்தினம் சிறப்பாக இடம் பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ. சரத்சந்திர தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலாளர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துக் கொண்டனர்.

இதன் போது பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரதேச கலைஞர்களால் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. மூத்த கலைஞர்கள் சிலர் பொன்னாடை போர்த்தி, விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் கலைநிகழ்வுகளை நிகழ்த்திய மாணவர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன.



















# அ.தி.மு.க. கொடியை பயன்படுத்த தடை:

# ஓ.பன்னீர்செல்வத்தின் மேல்முறையீடு மனு உயர் நீதிமன்றத்தில் 15 ஆம் திகதி விசாரணை

அ.தி.மு.க. பெயர், கொடி, சின்னம், கடித்த தலைப்பை பயன்படுத்த விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீக்கக் கோரி ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த மேல்முறையீட்டு மனு எதிர்வரும் 15 ஆம் திகதி விசாரிக்கப்படும் என உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் அ.தி.மு.கவின் பெயர், கொடி, சின்னம் மற்றும் கடித்த தலைப்பு போன்றவற்றை பயன்படுத்த தடை விதிக்கக்கோரி அ.தி.மு.க பொதுச் செயலாளரான பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை கடந்த நவம்பர் 7 ஆம் திகதி விசாரித்த தனி நீதிபதி, அ.தி.மு.கவின் பெயர், கொடி, சின்னம், கடித்த தலைப்பு போன்றவற்றை ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது தரப்பினர் பயன்படுத்தக் கூடாது என இடைக்காலத்



தடை விதித்து உத்தர விட்டிருந்தார்.

தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க கோரி நேற்று முன்தினம் நீதிபதிகள் முன்பாக வழக்கறிஞர் பி.ராஜலட்சுமி முறையீடு செய்தார். அதையடுத்து இந்த மனுவை பட்டியலிடும் நடைமுறைகள் முடிந்தால் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிபதிகள் தெரிவித்திருந்தனர்.

அதன்படி இந்த மனு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வரவில்லை, அதையடுத்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் ஆஜரான மூத்தவழக்கறிஞர் பி.எச். அரவிந்த்பாண்டியன், இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டுமென கோரினார்.

அதற்கு நீதிபதிகள், முறையீடுசெய்த அன்றே மனு தாக்கல் செய்யாத நிலையில், எப்படி இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க முடியும் என்றனர். பின்னர் இந்த மனு எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளனர்.

# தெலுங்கானா சட்டப்பேரவை தேர்தல்: சந்திரசேகர ராவ் 2 தொகுதிகளில் போட்டி



தெலுங்கானா சட்டப்பேரவை தேர்தல் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இந்த நிலையில் முதல்வர் கே.சந்திரசேகர ராவ் நேற்று முன்தினம் காலையில் சித்திப்பேட்டை மாவட்டம் கஜ்வேல் தொகுதியில் வேட்பு மனுதாக்கல் செய்தார்.

இந்த தொகுதியில் இருந்து சட்டப்பேரவைக்கு அவர் 2 முறை தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து, காமாரெட்டி மாவட்டம் காமாரெட்டி தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார். சந்திரசேகர ராவ் முதல்முறையாக 2 பேரவைத் தொகுதிகளில் போட்டியிடுகிறார்.

முதல்வரின் மகனும் ஐ.டி. துறை அமைச்சருமான கே.டி. ராமாராவ் நேற்று காலை சிரிசில்லா தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார். முதல்வரின் மருமகன் ஹரீஷ்ராவ், சித்திப்பேட்டையில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

தெலுங்கானா முழுவதும் நேற்று முன்தினம் வேட்பாளர்கள் ஏராளமானோர் ஊர்வலமாக சென்று வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

இதேவேளை, தெலுங்கானா சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.

தெலுங்கானா மாநிலத்தில் மொத்தமுள்ள 119 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல்நடைபெற உள்ளது.

இங்கு ஆளும் கட்சியான பி.ஆர். எஸ், எதிர்க்கட்சிகளான காங்கிரஸ், பா.ஜ.க. ஆகிய 3 கட்சிகளிடையே மும்முனைப் போட்டி நிலவுகிறது.

இந்த நிலையில், கடந்த 3 ஆம் திகதி இங்கு வேட்பு மனு தாக்கல் தொடங்கியது. நேற்று பிற்பகல் 3 மணியுடன் வேட்பு மனு தாக்கல் நிறைவடைந்தது.

எதிர்வரும் 13 ஆம் திகதி வேட்பு மனுக்கள் மீது பரிசீலனை நடைபெற உள்ளது.

# காஸாவை ஆளும் எண்ணம் இஸ்ரேலுக்கு இல்லை!

## - பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிப்பு



காஸாவை ஆளும் எண்ணம் இஸ்ரேலுக்கு இல்லை என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

முன்னதாக, காஸாவில் ஒவ்வொரு நாளும் 4 மணி நேரம் தாக்குதல் நிறுத்தத்தை இஸ்ரேல் பிரதமர் அறிவித் ததாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இந்த அறிவிப்பு தொடர்பாக பேசிய பிரதமர் நெதன்யாகு, இஸ்ரேலிய இராணுவம் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருப்பதாகவும் பாலஸ்தீனத்தை மீண்டும் கைப்பற்றும் திட்டம் இஸ்ரேலிடம் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

'போர் நிறுத்தம் என்பது ஹமாஸிடம் சரணடைவதற்கு ஒப்பானது. இராணுவம் தாக்குதல் நடத்துவதற்கு நேர அட்டவணை கிடையாது. இஸ்ரேல் இராணுவம் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. எவ்வளவு நாள் எடுக்குமோ அது வரை நாங்கள் போரிடுவோம்.

காஸாவை ஆளும் எண்ணம் இஸ்ரேலுக்கு இல்லை. நாங்கள் ஆக்கிரமிக்கவும் முயற்சிக்கவில்லை, காஸாவுக்கும் எங்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை அமைக்கவே எதிர்பார்க்கிறோம். காஸாவில் மக்களின் அரசை வரவேற்கிறோம்' என நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

மேலும், வெற்றிக்குப் பிறகு எப்போதும் காஸாவிற்குள் நுழைய இஸ்ரேல் படை தயாராக இருக்கும் என்றும் அதுவே ஹமாஸ் போன்ற குழு மீண்டும் உருவாவதைத் தடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், காஸாவில் கடந்த மாதம் 7 ஆம் திகதி முதல் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 818-ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 4 ஆயிரத்து 412 பேர் சிறுவர்கள், 2 ஆயிரத்து 198 பேர் பெண்கள் என காஸாவின் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# காசாவில் இரு தரப்பினரும் பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றனர்

## - ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரம் தகவல்




காசாவில் இரு தரப்பினரும், பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றனர் என ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமை உயர்ஸ்தானிகரகத்தின் தலைவர் வொல்கர் டேர்க் தெரிவித்துள்ளார்.

சாதாரண பொது மக்களை பழிவாங்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளை இஸ்ரேலும் ஹமாஸும் உடனடியாக நிறுத்தி சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வடக்கு காசாவின் சில பகுதிகளிலும் நாளாந்தம் நான்கு மணி நேரத்திற்கு இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

விரைவில் இந்த திட்டம் அமுல்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த நடைமுறையினை போர் நிறுத்தம் என தவறான முடிவிற்கு வரக்கூடாது என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட இந்த கால பகுதியினில் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்கள் என கருதும் இடங்களை நோக்கி நகர முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, காசாவில் உள்ள மூன்று வைத்தியசாலைகளுக்கு அருகில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக காசாவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசா நகரத்தில் உள்ள மிக பெரிய வைத்தியசாலைக்கு அருகில், இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேல் உறுதிப்படுத்தியுள்ளது.

சாதாரண பொது மக்கள் இந்த இராணுவ நடவடிக்கைகள் மூலம் பாதிப்படையவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.